கம்பராமாயண

விநாடிவினா - 200

(விடையுடன்)











வி. சுப்பிரமணியன்
செயலாளர், அம்பத்தூர் கம்பன் கழகம்

கம்பராமாயண

விநாடிவினா - 200
(விடையுடன்)



அம்பத்தூர் கம்பன்கழக
மாதக்கூட்ட விநாடிவினா
நிகழ்ச்சிகளில் இடம் பெற்றவை

ஆக்கமும் வெளியீடும் :

சித்தாந்தரத்தினம் **வி. சுப்பிரமணியன்**
செயலாளர், அம்பத்தூர் கம்பன்கழகம்

F-1, மகாலட்சுமி அடுக்ககம்,
22/40, ஜீவானந்தம் தெரு, விநாயகபுரம்,
அம்பத்தூர், சென்னை – 600 053.

கைபேசி : 9380263341

நூல் விவரம்

தலைப்பு	:	**கம்பராமாயண விநாடிவினா-200** (விடையுடன்)
ஆக்கமும் தொகுப்பும்	:	**வி. சுப்பிரமணியன்** செயலாளர், அம்பத்தூர் கம்பன் கழகம்
மொழி	:	தமிழ்
நூல் வகை	:	இலக்கியம்
© உரிமை	:	ஆசிரியருக்கே
பதிப்பு	:	முதற்பதிப்பு, மே மாதம் 2022
பக்கங்கள்	:	40
வெளியீடு	:	**சித்தாந்தரத்தினம் வி. சுப்பிரமணியன்** செயலாளர், அம்பத்தூர் கம்பன் கழகம் அம்பத்தூர், சென்னை - 600 053. கைபேசி : 9380263341
அச்சிட்டோர்	:	ஸ்ரீ தேவி பிரிண்டிங் பிரஸ், அம்பத்தூர், சென்னை - 600 053. கைபேசி : 9840764101

18-2

ஆக்கம் : வி. சுப்பிரமணியன்

முகவுரை

கடந்த 11 ஆண்டுகளாக, கம்பராமாயணப் பரப்புதலில் ஆர்வம் கொண்டு, கன்னித்தமிழ் வளர்த்து வருகிறது அம்பத்தூர் கம்பன்கழகம். இப்பணியில் மாதச்சொற்பொழிவுக் கூட்டங்கள் மற்றும் ஆண்டுச் சிறப்பு நிகழ்வுகளோடு புதுமையான நிகழ்ச்சிகள் பலவற்றையும் அறிமுகப்படுத்தி அவற்றையும் இக்கழகம் தொடர்ந்து நடத்திவருகிறது. கம்பராமாயணத் தொடர் வகுப்பு, கம்பராமாயண விநாடிவினா, பட்டிமண்டபப் பயிலரங்கம், மாணவர்களுக்கான கம்பராமயணப் பட்டயக் கல்வி வகுப்புகள் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

பரவலான அறிவு, நுணுக்கமான புலமையை விநாடிவினா நிகழ்ச்சிகள் ஊக்குவிக்கின்றன. அந்நோக்கத்தில், பார்வையாளர்கள் பங்கேற்கும் கம்பராமாயண விநாடிவினா நிகழ்ச்சியை, கழகக் கூட்டம் எண் 74இல் அறிமுகப்படுத்தி, 28.03.2015 அன்றிலிருந்து ஒவ்வொரு மாதக் கூட்டத்திலும், முதல் அரைமணி நிகழ்வாக இது நடத்தப்பெறுகிறது. கடந்த பல ஆண்டுகளாக இதுவரை 51 விநாடிவினா நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களில் ஐவர் சுழற்சிமுறையில் நெறியாளராக இருந்து விநாடிவினாக்களை வடிவமைத்து இதை நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு மாத நிகழ்ச்சியிலும் சரியாக விடைஅளிக்கும் பார்வையாளருக்கு, உடனுக்குடன் சிறப்பு விருந்தினர் கரங்களால் ஒரு நூல் பரிசாக அளிக்கப்பெறுகிறது. ஓர் ஆண்டு நிகழ்ச்சிகள் அனைத்திலும் ஒரு சேர அதிகப்பரிசு பெற்ற மூன்று பார்வையாளர்களுக்கு சிறப்புப் பரிசும் ஆண்டு விழாவின் போது அளிக்கப்பெற்றது.

இந்த விநாடிவினா நிகழ்ச்சிகள் பார்வையாளர் களிடையே எதிர்பார்த்ததைவிட மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. பார்வையாளர்களில் சிலர் இதற்காகவே

வந்திருந்து, விநாடிவினா முடிந்ததும், அடுத்த நிகழ்ச்சிக்காகக் கூடக் காத்திராமல், பெற்ற பரிசுப்புத்தகங்களுடன் கூட்டத்திலிருந்து விடைபெற்றுச் சென்றுவிடுவதைக் காணமுடிந்தது. முதலில் கம்பகாவியத்தில், பொதுவாக நடத்தப்பெற்ற விநாடிவினா நிகழ்ச்சிகள், பின்னர் மாதம் ஒரு காண்டத்திலும், அதன் பின்னர் தற்போது மாதக் கூட்டத்தில் ஒவ்வொரு காண்டத்தின் ஏறத்தாழ 5 படலங்களிலும் நடைபெற்று வருகிறது. சில பார்வையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இதையும் நிகழ்ச்சிக்கு ஒரு படலமாக நடத்தலாம் என்னும் ஆலோசனையும் இருந்து வருகிறது.

நெறியாளராக இருந்து சில விநாடிவினா நிகழ்ச்சிகளை வடிவமைத்து மாதக்கூட்டங்களில் நடத்தும் வாய்ப்பை நானும் பெற்றேன். அந்த விநாடிவினாக்கள் 200ஐ ஒருங்கிணைத்து, அதற்கான விடைகளுடன் இந்நூல் வெளியிடப்பெறுகிறது. இதையும், கம்பகாவியம் போற்றும் தமிழுலகம் வரவேற்கும் என நம்புகிறேன்.

இந்நூலுக்குத் தகுந்த அணிந்துரை ஒன்றை அளித்து, சிறப்புச் செய்திருக்கும் கம்பகாவியவல்லுநர் முனைவர் இராம. சௌந்தரவல்லி அவர்களுக்கும், அருமையாக அச்சிட்டு அளித்திருக்கும் அம்பத்தூர் ஸ்ரீ தேவி பிரிண்டிங் பிரஸ் நிறுவனத்திற்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

அம்பத்தூர்,
சென்னை.
மே, 2022

வி. சுப்பிரமணியன்
செயலாளர்
அம்பத்தூர் கம்பன்கழகம்

பின் குறிப்பு : இந்நூலைப் படித்து விட்டு அதன் நிறைகுறைகளை எனக்கு (கைபேசி : 9380263341) தெரிவிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கிறேன்.



அணிந்துரை

முனைவர் இராம.சௌந்தரவல்லி
தமிழ்ப்பேராசிரியர் (பணி நிறைவு)
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம் - 627 818.

கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ்வளர்க்கும் பணியில், தமிழகத்துக் கம்பன்கழகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. அவற்றுள், அம்பத்தூர் கம்பன்கழகம் தன்பங்களிப்பினைச் செவ்வனே செய்து வருகிறது. இக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகிக்கும் சித்தாந்த ரத்தினம் திரு.வி.சுப்பிரமணியன் அவர்கள் மிகச் சிறந்த தமிழ் ஆர்வலர். தனது இளமைக் காலத்தில் இரங்கூனில் வாழ்ந்த பொழுதே பல அரிய கட்டுரைகளை எழுதியுள்ளார். மாணவப் பருவத்திலேயே அவர்தம் உயரிய சிந்தனைகளை இரங்கூன் தமிழ் மாத, வார இதழ்கள் விரும்பிப் பிரசுரித்தன என்பது வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது.

அம்பத்தூர் கம்பன்கழகம் நடத்திய மாதாந்திரக் கூட்டங்களின் ஒரு பகுதியாகிய கம்பராமாயண விநாடிவினா நிகழ்வினைப் பெருமுயற்சிசெய்து அவர் ஒரு நூலாகத் தொகுத்திருக்கிறார். இரங்கூனில் தொடங்கிய இலக்கியப் பணி, இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பது மகிழ்வான செய்தி. "கம்பராமாயண விநாடிவினா-200 (விடையுடன்)" என்ற இந்த நூல் அம்பத்தூர் கம்பன்கழகத் தமிழ்ப்பணிக்கு ஒரு ஆவணமாகத் திகழ்கிறது. தொழில் நுட்பச் சாதனங்களில் மூழ்கித் தங்களின் நேரத்தையும், இளமையையும் வீணாக்கிக் கொண்டிருக்கும் இன்றைய இளையசமுதாயத்திடம், தமிழ்ஆர்வத்தை ஏற்படுத்தும் சீரிய பணியை இந்நூல் செய்திருக்கிறது. விநாடிவினா என்பது நுணுகிக்கற்கும் ஆர்வத்தைத் தூண்டக் கூடியது. கம்பராமாயணத்தை இளையதலைமுறைக்கு எடுத்துச்

செல்லும் இந்நூலில் 200 வினாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காண்டத்தின் வினாக்களுக்கும் விடைகள் தனியே தரப்பட்டிருப்பது சிறப்பு. கம்பராமாயண உட்பகுதிகள் மட்டுமல்லாமல், கம்பன்கழகங்கள் எத்தனை? அவற்றின் நோக்கம் என்ன? என்பன போன்ற பொது வினாக்கள், காவியத்தைத் தாண்டியும் தமிழ்அறிவு பெறப் பெருந்துணை செய்வன. அனைத்து வினாக்களும் விடைகளும் கம்பனைக் கற்போர் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டிய செய்திகள். வினாக்களைத் தேர்வு செய்து, நிகழ்வுகளை நடத்தி, அவற்றைத் தொகுத்து நூலாக ஆவணப்படுத்தி உள்ளமை திரு.வி.சுப்பிரமணியன் அவர்களின் அயராத உழைப்பைக் காட்டுகிறது. அன்னாருக்கு எனது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் புதிதாகக் கம்பனைக் கற்க விரும்புவோருக்கும் இந்நூல் சிறந்த வழிகாட்டி என்பது உண்மை. அவரின் தமிழ்ப்பணி இறைப்பணி போல இன்னும் பல்லாண்டு காலம் தொடர எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுகிறேன்.

பள்ளத்தூர்

அன்புடன்,
இராம. சௌந்தரவல்லி



பொருளடக்கம்

கம்பராமாயண விநாடிவினா

1. பொதுப் பகுதி

1. தமிழ் இராமாயணக் காப்பியத்திற்கு கம்பரால் சூட்டப் பெற்ற பெயர் என்ன?

2. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள் எத்தனை?

3. கம்பாராமாயணக் காண்டங்களின் உட்பகுதிக்கு என்ன பெயர்? அவை எத்தனை?

4. கம்பகாவியத்திலுள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?

5. காப்பித்திற்கு நேரடித் தொடர்பற்ற மனுநீதிச் சோழன் சரிதத்தை பெரியபுராணச் சேக்கிழார் பாடுவதைப் போல், இராமாயணத்தில் அக்காப்பியத்திற்கு நேரடித் தொடர்பில்லாத ஒரு சம்பவ நிகழ்ச்சியைக் கம்பர் தன் நூலில் பாடியிருக்கிறார். அப்பகுதியின் பெயர் என்ன?

6. சங்கம் மருவிய தமிழ்க்காப்பியம் ஒன்றில், காப்பிய நாயகனைப் பிரிந்த அவன் சொந்த ஊரானது, தந்தையின் கட்டளையை ஏற்றுக் கானகம் சென்ற இராமரைப் பிரிந்த அயோத்தி போன்றிருந்தது எனக் குறிப்பிடுகிறது. அத்தமிழ்க் காப்பியத்தின் பெயர் என்ன?

7. கால வர்த்தமானத்தைக் கடந்து நிற்கும் இராமாயணக் கதாபாத்திரம் யார்?

8. தயரதருக்கு அமைச்சராகவும் தேரோட்டியாகவும் இருந்தவர் யார்?

9. இராமன் என்னும் பெயரின் பொருள் என்ன?

10. இராவணன் என்னும் பெயரின் பொருள் என்ன?

11. அனுமன் இராமரின் தூதனா? தொண்டனா?

12. சீதை திருமகளின் அவதாரம் என்பதை இராவணன் அறிந்திருந்தானா?

13. விதியைப்பற்றிக் கம்பரின் கருத்து என்ன?

14. திருவெண்ணைநல்லூர் சடையப்பவள்ளலைப் பற்றிக் கம்பர், இராமாயணக் காவியத்தில் பாடியிருக்கும் பாடல்களில், ஒரு பாடலின் ஒரு அடியையாவது கூற முடியுமா?

15. வால்மீகத்தில் இல்லாத ஆனால் கம்பராமாயணத்தில் இடம் பெற்றிருக்கும் இரு படலங்கள் யாவை?

16. கம்பராமாயண காண்டங்களில் குறைந்த படலங்களைக் கொண்ட காண்டம் எது?

17. திருவடிசூட்டு படலம், திருவடிதொழுத படலம், திருமுடிசூட்டு படலம் இவை ஒவ்வொன்றும் எந்த எந்தக் காண்டங்களில் வருகின்றன?

18. ஏழு தம்பியருள், இராமர் தேடிச் சென்ற தம்பி யார்?

19. இயங்கி வரும் கம்பன் கழகங்களின் எண்ணிக்கை எத்தனை?

20. கம்பன் கழகங்களின் பொதுவான குறிக்கோள் / கொள்கை என்ன?

இந்த விநாடிவினாக்கள், அம்பத்தூர் கம்பன்கழக 28.05.2015 (மாதக் கூட்ட எண்.74) மற்றும் 22.08.2015 (மாதக் கூட்ட எண்.79) நிகழ்ச்சிகளில் கேட்கப்பெற்றவை.



கம்பராமாயண பொதுப்பகுதி விநாடிவினாக்களின் விடைகள்

1. இராமாவதாரம்
2. 6 (ஆறு)
3. படலங்கள். அவை 118
4. 10,294
5. யுத்த காண்டத்திலுள்ள இரணியன்வதைப் படலம்
6. சிலப்பதிகாரம்
7. ஆஞ்சநேயர்
8. சுமந்திரன்
9. மகிழ்ச்சியைத் தருகின்றவன்
10. ரோதனம் (அழுதல் செய்தவன்)
11. தொண்டன் என்பதே பொருந்தும்
12. அறியவில்லை (மாயாசனகப் பாடல் ஒன்றின் ஈற்றடி "அமிழ்தின் வந்தசெந்திரு நீர் அல்லீரேல் அவளும் வந்து ஏவல் செய்யும்" என சீதையைப் பார்த்து இராவணன் கூறிய கூற்றின்படி தெரிகிறது)
13. விதியின்படிதான் அனைத்தும் நடக்கும் என்பது கம்பரின் கருத்து ("விதியின் பிழை நீ இதற்கு என்கொல் வெகுண்டது")
14. அரியணை அனுமன் தாங்க, பாடலில் வரும் "வெண்ணையூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" என்பது.
15. யுத்த காண்டத்தில் இடம்பெறும் இரணியன் வதைப் படலமும் மாயாசனகப் படலமும்
16. அயோத்தியா காண்டமும் (13) ஆரணியா காண்டமும் (13) ஆகும்.
17. திருவடி சூட்டு படலம் – அயோத்தியா காண்டம், திருவடி தொழுத படலம் – சுந்தர காண்டம்; திருமுடி சூட்டு படலம் யுத்த காண்டம்.
18. சுக்ரீவன்
19. 48 (இதில் 4 வெளி நாட்டில்)
20. "கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்" என்பது.

2. பால காண்ட விநாடிவினாக்கள்

1. "ஓதிய உடம்புதோறும் உயிரென உலாய தன்றே" என எதைக்குறிப்பிட்டுக் கம்பர் பாடுகிறார்?
2. அன்னசத்திரத்திற்குக் கம்பர் கையாளும் செந்தமிழ்ச் சொல் எது?
3. திரிபுரங்களை அழித்த சிவபெருமானும் இராம அவதாரத்தில் கலந்து கொண்டாரா?
4. கையடைப் படலத்தின் பெயர்க்காரணம் என்ன?
5. பாலையின் வெம்மையைத் தாங்கிக் கொள்வதற்கு, விசுவாமித்திரர் இராமர் - இலக்குமணருக்கு உபதேசித்த மந்திரத்தின் பெயர் என்ன?
6. 'காகுந்தன் கன்னிப்போர்' எனக் கம்பர் எதைக் கூறுகிறார்?
7. 'கைவண்ணம் அங்கு கண்டேன் - கால் வண்ணம் இங்கு கண்டேன்' - என்னும் தொடரில், கால் வண்ணம் என எதைக் குறித்து விசுவாமித்திரர் வியந்து பாராட்டினார்?
8. சதகோடி மின் சேவிக்க மின் அரசு என்னும்படி நின்றதாக கம்பர் யாரைப் பற்றிச் சொல்லுகிறார்?
9. "சுஞ்சலம் கலந்த போது தையலாரை உய்ய வந்து அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே?" இவ்விதம் புலம்பியவர் யார்?
10. இராமர் சிவன் வில்லை முறிப்பதற்கு முன்னர் வேறு ஒருவன் ஆயிரம் வில்களை முறித்தான் எனக் கம்பர் கூறுகிறார். அவன் யார்?
11. அயோத்தியிலிருந்து மிதிலை செல்லும் வழியில் தயரதன் சேனை தங்கிய இடத்தின் பெயர் என்ன?
12. சிவதனுசு வில்லின் வரலாற்றை, ஜனகன் அரண்மனை மண்டபத்தில், விசுவாமித்திரர் இராமர், இலக்குவருக்குக் கூறியவர் யார்?
13. ஒரு முனிவன் சாபத்தால் இந்திரன் செல்வங்கள் யாவும் பாற்கடலைச் சென்று சேர்ந்தன என்று அறிகிறோம். அவ்விதம் சாபமிட்ட முனிவர் பெயர் என்ன?

14. இராமர் - சீதை திருமண நாள் எதைப் போன்றிருந்தது எனக் கம்பகாவியம் கூறுகிறது?
15. "ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்" எனக் கம்பரால் குறிப்பிட்டுச் சொல்லப்படுபவர்கள் யாவர்?
16. இராமர் - சீதை திருமணச் சடங்குகளில், இன்றைக்கு வழக்கில் இருந்து வரும் ஒரு முக்கிய திருமணச் சடங்கு குறிப்பிடப்படாமல் இருக்கிறது. அது எது?
17. இலக்குவனுக்கு மணம் முடித்த ஊர்மிளை யாருடைய மகள்?
18. பரசுராமரிடமிருந்து பெற்ற திருமால் வில்லை அயோத்திக்குச் செல்வதற்கு முன், இராமர் யாரிடம் கொடுத்துப் பாதுகாப்பாக வைத்திருக்கச் சொன்னார்?
19. "வாசகம் வல்லார் முன் நின்று யாவர் வாய் திறக்க வல்லார்?" இது எதைக் குறித்துச் சொல்லப்பட்டது?
20. "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என முடிவடையும் கம்பராமாயணப் பாடலுக்கு அடிப்படையாக அமைந்த திருக்குறள் எது?
21. "புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருள்" எனக் கம்பர் எதைக் குறிப்பிடுகிறார்?
22. "எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்" என்பதை இறுதி அடியாகக் கொண்ட பாடலில் கம்பர் கூறும் தகவல் என்ன?
23. "கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல" என ஒரு நகர் வீதிகளின் எழிலைக் கம்பர் வர்ணிக்கிறார். அந்நகரின் பெயர் என்ன?
24. வால்மீக ருசியசிங்கர், கம்பராமாயணத்தில் நற்றமிழில் எவ்விதம் அழைக்கப்பெறுகிறார்?
25. நீலமாலை என்பவர் யார்?
26. "பன்னருங்கலைதெரி பட்டிமண்டபம்" இருந்ததாகக் கம்பர் கூறும் நகரத்தின் பெயர் என்ன?
27. "கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி" எனக் கேட்டவர் யார்?
28. "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ" என்ற பாடலில் குறிப்பிடப்பெறும் பிரிந்தவர் யாவர்?
29. "ஊழ் கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்" யார்?

30. "கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்" யார்?
31. "தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க" எனத்தொடங்கும் பாடலால் கம்பர் வர்ணிக்கும் நிலத்தின் பெயர் என்ன?
32. சந்திரசயில மலை எங்குள்ளது?
33. திருமாலின் படைகளான சங்கும் சக்கரமும் இராமாயண அவதாரத்தில் யார் யாராகப் பிறந்தனர்?
34. தயரதனின் அரண்மனைக்கு வந்த பிரம்மரிசியின் பெயர் என்ன?
35. கௌதமமுனிவரின் சாபத்தால் கல்லாகிப் போனவர் யார்?
36. "நோய்ஒக்கும் என்னின் மருந்துஒக்கும்" எனக் குறிப்பிடப்பெறுபவர் யார்?
37. "ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ" என வெகுண்டெழுந்தவர் யார்?
38. பாலகாண்ட நகரப் படலத்தில், கம்பரின் சமத்துவக் கொள்கையைப் பறைசாற்றும் பாடல் அடிகளில் ஏதாயினும் ஒன்றைக் கூறுக.
39. தாடகையைக் கொன்றுவிடு என்று விசுவாமித்திரர் சொல்லியும், இராமர் அவ்விதம் செய்யத்தயங்கியதின் காரணம் என்ன?
40. "கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்" என்று கூறியவர் யார்?

இந்த விநாடிவினாக்கள், அம்பத்தூர் கம்பன்கழக மாதக் கூட்டம் எண்கள் 114 முதல் 116 வரை முறையே 18.08.2018, 29.09.2018 மற்றும் 20.10.20218 தேதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கேட்கப்பெற்றவை.



பால காண்ட
விநாடிவினாக்களின் விடைகள்

1. சரயு நதியைக் குறிப்பிட்டு
2. ஊட்டிடம்
3. ஆம் (வாயுவுடன் சிவனும் அனுமன் அம்சமாக அவதரித்ததால்)
4. தயரதன் விசுவாமித்திரரிடம் இராம இலக்குவனரை அடைக்கலமாகக் கொடுத்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவதால்.
5. பாலை, அதிபலை
6. தாடகை வதத்தை
7. இராமரின் காலடித்துகள் பட்டவுடன் அகலிகை சாபம் நீங்கி உயிர் பெற்றதை
8. சீதையைப் பற்றி
9. சீதை
10. மன்மதன்
11. சந்திரசயில மலை அடிவாரம்
12. கௌதம முனிவர் மகன் சதானந்த முனிவன்
13. துருவாச முனிவர்
14. இந்திரன் முடிசூடும் திருநாளைப் போன்றிருந்தது.
15. இராமரும் சீதையும்
16. மணமகன், மணமகளுக்குத் திருமாங்கல்யம் அணிவித்தல்
17. சனகன் மகள் (சனகனுக்கு சீதை கிடைத்த பின் பிறந்த மகள்)
18. வருணனிடம்
19. இசை போல் பேசும் பெண்களைக் குறித்து (அவர்கள் முன் குயில்கள் வாய்திறக்க நாணினவாம்)
20. "கண்ணொடு கண்ணினை நோக்கிகொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல."
21. தாடகை வதத்தை (கல்விகல்லாத இழியோருக்கு கற்றுணர்ந்த நல்லோர் சொன்ன அறிவுரை மனதில் தங்காதது போல். இராமரின் அம்பு தாடகையின் நெஞ்சை ஊடுருவிச் சென்று விட்டதைப் பற்றி)

22. இராமர் சிவதனுசுவை எடுத்ததைக் கண்டவர்கள், அடுத்த நொடியிலேயே அது ஒடிந்த சத்தத்தைக் கேட்டனர் என்பதை.
23. மிதிலை
24. கலைக்கோட்டு முனிவன் என
25. சீதையின் தோழி (இராமர் சிவதனுசுவை வளைத்ததை, சீதைக்குக் கூறியவள்)
26. அயோத்தி
27. விசுவாமித்திரர்
28. இராமனும் சீதையும்
29. இராமனின் அழகைக் கண்டு மயங்கிய மிதிலை நகரத்துப் பெண்கள்
30. குகன்
31. கோசல நாட்டு மருதநிலம்
32. அயோத்தியிலிருந்து மிதிலைக்குச் செல்லும் வழியில்
33. சத்துருக்கனன், பரதனாக
34. விசுவாமித்திரர்
35. அகலிகை
36. தயரதன்
37. குகன்
38. "எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ"
39. தாடகை ஒரு பெண் என்பதால்
40. சுமந்திரன்



3. அயோத்தியா காண்ட விநாடிவினாக்கள்

1. "விதியின் பிழை, நீ இதற்கு என் கொல்வெகுண்டது" என இராமர் இலக்குவனிடம் கூறுவதாக வரும் பாடலில், அதற்கு ஒப்புமையாகக் கூறப்படும் பிழைகளில் ஒன்றைக் கூறுக.
2. "நிறை குணத்தவன் நின்னிலும் நல்லன்" எனவும் "ஆயிரம் இராமர் நின்கேள்வர் ஆவரோ" எனவும் பாராட்டப்பெறுகிற கம்பராமாயணப்பாத்திரம் யாருடையது?
3. "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா? - யாரின் முகத்தைக் கம்பர் இவ்விதம் வர்ணிக்கிறார்?
4. தயரதனின் அமைச்சர்கள் எத்தனைபேர்?
5. "நந்தாவிளக்கணைய நாயகனே" என விளிக்கப்பெற்றவர் யார்?
6. "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?" யார் அந்தப் பின்னவன்?
7. "அந்தியும் பகலும் நீர்அறாத கண்ணினான்" யார்?
8. "கண்ணே வேண்டுமெனினும் ஈயக்கடவேன்" என்று கூறியவர் யார்?
9. "வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை" என்று கூறப்பட்டவன் யார்?
10. "தாய் கைகேயின் வஞ்சகத்தை அறிந்திருந்தால் நான் நரகத்திற்குச் செல்வேன்" என அது சம்பந்தமாகப் பரதன் பட்டியலிட்ட 50 நரகக்குற்றங்களில் ஏதாயினும் ஒன்றைக் கூறுக.
11. "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" எனச் சொன்னவர் யார்?
12. "பிள்ளையொடு பூவை அழுத" - எதனால்?


13. "தீயினும் சிறந்த தீயாள்" யார்?
14. "யாரொடும் பகைகொள்ளலன் என்ற பின், போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது" - இது யாரின் கூற்று.
15. "உணாங்குவாய் அல்லை நீ உறங்குவாய்" இது யாரைப் பார்த்து சொல்லப்பட்டது?
16. தன்னையும் காட்டிற்கு அழைத்துச்செல் என்று கேட்ட தாய் கோசலையிடம் இராமன் தொடுத்த வினா என்ன?
17. "மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அது அன்றேல் முன்னம் முடி" - இப்படி யாரால் யாருக்கு அறிவுரை சொல்லப்பட்டது.
18. வனவாசத் தொடக்கத்தில் தன்னைப் பின் தொடர்ந்த அயோத்தி மக்களைத் திருப்பி அனுப்ப, இராமர் செய்த உபாயம் என்ன?
19. இராமர், இலக்குவன் சீதையுடன் வனம் புகுந்ததும் அவர்களை முதலில் சந்தித்து விருந்தளித்து சித்திரக் கூடத்தில் தங்க ஆலோசனை கூறியவர் யார்?
20. தைலத்தில் இட்டுவைத்திருந்த தயரதனது உடலுக்கு, இறுதிக்கடன் ஆற்றும் பேறு யாருக்குக் கிடைத்தது?

இந்த விநாடிவினாக்கள், அம்பத்தூர் கம்பன்கழக மாதக் கூட்டம் எண்கள் 91 (27.08.2016 ஆம் தேதி) நடைபெற்ற நிகழ்ச்சியில் கேட்கப் பெற்றவை.



அயோத்தியா காண்ட விநாடிவினாக்களின் விடைகள்

1. நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே. (நல்ல நீர் இன்றி வற்றிப் போய்விடுதல் நதியின் பிழையன்று)
2. பரதனுடையது
3. இராமரின் முகத்தை
4. அறுபதினாயிரவர்
5. தயரதன்
6. பரதன்
7. பரதன்
8. தயரதன்
9. பரதன்
10. உயிர்க்கொலை / பொய்ச்சாட்சி சொல்வது / புலால் உண்பது முதலியன.
11. சீதை
12. இராமன் காட்டுக்குப் போவான் என்னும் செய்தியைக் கேட்டதால்
13. கைகேயி
14. வசிட்ட முனிவனின் கூற்று (முடிசூடவிருந்த இராமனைப் பார்த்து அவர் கூறிய உறுதிப் பொருள்களில் இதுவும் ஒன்று)
15. கைகேயியைப் பார்த்து (மந்தரை சொன்னது)
16. இராமனைப் பிரிந்து துன்பக் கடலில் மூழ்கும் தந்தையின் இருகே இருந்து தேற்றாமல் தாயான அவளும் காட்டுக்கு வர முடிவு செய்யலாமா? என்பது
17. சுமத்திரையால் அவள் மகன் இலக்குவனுக்கு
18. வழியில் தூங்கி ஓய்வெடுத்த மக்கள் விழித்தெழுமுன் இராமர், தான்வந்த தேரை அயோத்திக்குத் திருப்பி அனுப்பி, அவர் அயோத்திக்குத் திரும்பி விட்டார் என மக்களை நகரத்திற்கு மீள வைப்பது என்பதே.
19. பரத்துவாச முனிவர்
20. சத்துருக்கனனுக்கு



4. ஆரணிய காண்ட விநாடிவினாக்கள்

1. 14 ஆண்டுகள் வனவாசத்தில், இராமர் 10 ஆண்டுகள் தங்கியிருந்த வனத்தின் பெயர் என்ன?
2. கோதாவரிக் கரையில் எந்த இடத்தில் இராமர், சீதை, இலக்குவன் தங்கியிருந்தனர்?
3. சித்திரக்கூடப் பகுதியிலுள்ள கொடிய இராட்சதத் தலைவன் யார்?
4. ஆரணிய காண்டத்தில் இராமரிடம், தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட பறவையின் பெயர் என்ன?
5. இராவணனைச் சிறைவைத்தவன் யார்?
6. புஷ்பக விமானத்தில் இராவணன் சீதையைச் சிறை பிடித்துச் சென்றபோது, அவளை யார் காப்பாற்ற முயன்றார்?
7. பிரமன் பேரன், விச்சுரவசுவின் மகள் யார்?
8. இராம, இலக்குவர் மதங்கமுனிவரின் இருக்கையில் கண்ட பெண்துறவி யார்?
9. அத்ரி முனிவரின் பத்தினி பெயர் என்ன?
10. அகலியைப் போல், இராமர் பாதம்பட்டதும் சாபம் நீங்கப் பெற்ற அரக்கன் யார்?
11. வனத்தில் இராமர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்து, வந்தவுடன், தன் மனைவியோடு தீப்புகுந்து பரமபதம் அடைந்த முனிவரின் பெயர் என்ன?
12. சுதீக்கண முனிவர் செய்த அரிய செயல் யாது?
13. இராமரைப் பஞ்சவடியில் தங்கியிருக்க ஆலோசனை கூறியவர் யார்?
14. பஞ்சவடிச்சோலை எந்த ஆற்றங்கரையில் அமைந்திருந்தது?
15. ஜடாயுவின் தம்பி பெயர் என்ன?
16. கரனுடன்செய்த நீண்டபோரில், இராமருடைய வில் ஒடிந்துபோனதும் நடந்தது என்ன?

17. வெயிலுடை நாளில் உற்ற வெண்ணை போல் வெதும்பியது எனக் கம்பர் எதைக் குறிப்பிடுகிறார்?
18. இராவணன் சீதையைத்தீண்டாது, அவளை நிலத்தோடு பெயர்த்தெடுத்து விமானத்தில் வைத்துச் சென்றது ஏன்?
19. இலக்குவன் வாளினால், மூக்கும் காதும் அறுபட்ட இரண்டாவது அரக்கி யார்?
20. இராமர் ஸ்பரிசம்பட்டு சாபம் நீங்கப் பெற்றவன் யார்?
21. உருசியமுகமலையை அணுகி சூரியன் மைந்தனான சுக்ரீவனை நட்புக் கொண்டு, சீதையைத் தேட முயலுங்கள் என்று இராமருக்கு ஆலோசனை கூறியவர் யார்?
22. கரனின் இருதம்பியர் பெயர்கள் யாவை?
23. அகம்பன் என்பவன் யார்?
24. கோசிகனுடைய தெய்வப் படைக்கலங்கள் இராமனிடம் இருப்பதாகக் கூறியவர் யார்?
25. "தோளையே சொல்லுகேனோ? சுடர் முகத்து வாளையே சொல்லுகேனோ?" யாரைப் பற்றிய கூற்று இது?

இந்த விநாடிவினாக்கள் அம்பத்தூர் கம்பன்கழக மாதக் கூட்ட எண்கள் 92, 107இல், முறையே 24.09.2016, 30.01.2017 தேதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் இடம்பெற்றவை.



ஆரணிய காண்ட விநாடிவினாக்களின் விடைகள்

1. தண்டகவனம்
2. பஞ்சவடியில்
3. கரன்
4. ஜடாயு என்ற கழுகு
5. கார்த்த வீர்யார்ச்சுனன்
6. ஜடாயு
7. சூர்ப்பணகை
8. சவரி
9. அநசூயா தேவி
10. விராதன்
11. சரபங்கர்
12. தன் தவப்பயனை எல்லாம் இராமருக்குத் தட்சணையாக வழங்கியது.
13. அகத்தியர்
14. கோதாவரி
15. சம்பாதி
16. தேரிலிருந்து இராமர் பின்பக்கமாக நீட்டியகையில், வருணன், தான் பாதுகாத்து வைத்திருந்த பரசுராமரின் வில்லை அவருக்கு அளித்தது.
17. இராவணன் உள்ளத்தை
18. விருப்பமற்ற மாதரைத் தொட்டால் தலை வெடித்துவிடும் என அவன் பெற்றிருந்த பிரமனின் சாபத்தால்.
19. அயோமுகி
20. கவந்தன்
21. கவந்தன்
22. தூசணன், திரிசடன்
23. கரனுக்கு அறிவுரை கூறிய கல்வியாளன்.
24. மாரீசன்
25. சீதையைப் பற்றியது.

5. கிட்கிந்தா காண்ட விநாடிவினாக்கள்

1. "அகனமர் காதல் ஐய; உன்னொடும் எழுவர் ஆனேம்" என இராமர் கூறி மகிழ்ந்ததாகக் கம்பர் கூறுகிறார். அவ்வெழுவருள் இராமனின் ஐந்தாவது சகோதரராகக் கருதப்படுபவர் யார்?

2. தமிழ்நாடு, தமிழ்ச்சங்கம் பற்றிய செய்திகளை யார் வாயிலாகக் கம்பர் கூறுகிறார்?

3. சுக்ரீவன் எங்கு வசித்து வந்தான்?

4. வாலிக்கு இந்திரன் அளித்த வரம் என்ன?

5. "உற்றவர் எனக்கும் உற்றார் உன் இளை எனது" என்று கூறியவர் யார்?

6. "வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்" யார்?

7. இராமபிரானின் கரங்களிலுள்ள சக்கரக்குறிகளைத் தெரிந்து, அவர் நாராயணனின் வடிவம் என்று சொன்னவர் யார்?

8. இராமர், வாலியைக் கொல்லும் திறன் படைத்தவர் என்பதைச் சுக்ரீவன் எவ்வாறு உறுதிசெய்து கொண்டான்?

9. வாலி, பல நாட்கள் வரை போர் புரிந்து அழித்த அவுணன் பெயர் என்ன?

10. தானைகாண் படலத்தில் கம்பர் கூறுவது என்ன?

11. சீதையைத்தேடித் தென்திசை நோக்கிப்போன அனுமனுடன் சென்ற முக்கிய வீரர்கள் யாவர்?

12. இராவணன்தான் சீதையை எடுத்துச் சென்றிருக்கிறான் என்று சொன்னவர் யார்?

13. கிட்கிந்தா காண்டத் தொடக்கத்தில் கம்பர் எந்த நதியின் வளத்தைப் பற்றிக் கூறுகிறார்?

14. "இந்நெடுஞ்சிலை வலானுக்கு ஏவல் செய் அடியன் யானே" - இது யாருடைய கூற்று?

15. "மாயமான் ஆயினான், மா யமன் ஆயினான்" - இந்த அடியில் பொதிந்திருக்கும் கம்பரின் கவிச்சிறப்பு என்ன?

16. இந்திரன் சிறுவனென்றும் கதிரவன் சிறுவனென்றும் கம்பர் குறிப்பிடும் இருவர் யாவர்?

17. "மானுடம் வென்றது அன்றே" இத்தொடரில் கம்பர் உணர்த்துவது என்ன?

18. "பொருந்து நன்மனைக்குரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும் பின் என்றான்" - இது யார் யாரைப் பார்த்துக் கூறியது?

19. "கிட்டுவார் பொரக் கிடைக்கின் அன்னவர் பட்ட நல்வலம் பாகம் எய்துவான்" - இதன் பொருள் என்ன?

20. யார் முன் "கந்தவேள் வேல் செலாது" என அனுமன் வாயிலாகக் கம்பர் கூறுகிறார்?

21. மராமரத்தை அம்பினால் துளைக்க சுக்ரீவன் இராமரை வேண்டியதற்கும், பின்னர் இராமர் அவ்விதம் மராமரத்தைத் துளைத்து முடித்ததற்கும் உள்ள வேறுபாடு என்ன?

22. எந்த அரக்கன் உடலை உருசிய மலையில் இராமன் லெட்சுமணன் கண்டனர்?

23. இராவணன் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடித்துச் சீதையை மீட்க அனுமன் இராமனிடம் கூறிய ஆலோசனை என்ன?

24. சுக்ரீவன் அமைச்சர்களின் பெயர்கள் யாவை?

25. மறைவாகநின்று வாலியின் மேல் அம்பு செலுத்துவது என்ற கருத்து யாருடையது?

26. "மூவர் நீ முதல்வன் நீ முற்றும் நீ மற்றும் நீ பாவம் நீ தருமம் நீ பகையும் நீ உறவும் நீ" - இந்தக் கம்பனின் கூற்று யார் யாரைப் பார்த்துக் கூறுகூதாக அமைந்திருக்கிறது?

27. 'சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரர்களைப் போல் இருவர் விளங்கினர் எனக் கம்பர் யாரைக் குறித்துக் கூறுகிறார்?

28. "சுவை கதலியின் கனியினைக் கழியச் சேரும் ஊசியின் சென்றது" என்ற கூற்றில் கம்பர் எதை விளக்குகிறார்?

29. "வாலியைப் படுத்தாய் அல்லை மன்அற வேலியைப் படுத்தாய் விரல் வீரனே" - இதைக் கூறியவர் யார்?

30. "வீடு பெற்ற விலங்கும் விலங்கு அரோ" என்று இராமர் வாலியை நோக்கிக் கேட்டதில் குறிக்கப்பெறும் வீடு பெற்ற விலங்கு எது?

31. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்னும் புறநானூற்றுப் பாடல்வரியின் கருத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறும் கம்பன் கூற்று என்ன?

32. வாலி இராமரிடம் வேண்டிய இருவரங்கள் யாவை?

33. "அரியணை அனுமன் தாங்க" என்னும் பட்டாபிசேகப் பாடலில் "அங்கதன் உடையவாள் ஏந்த" எனக்கம்பர் குறிப்பிடுகிறார். இது பற்றிய முன்நோக்காக வாலிவதைப் படலத்தில் அவர் கூறுவது என்ன?

34. இராமர், சுக்ரீவனுக்குக் கூறிய அறிவுரைகளில் ஒன்றான "வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தரோடும் சேய்மையோடு அணிமை இன்றி தேவரின் தெரிய நிற்றி" என்பதை நினைவுபடுத்தும் திருக்குறள் எது?

35. தானைகாண் படலத்தில் கூறப்படும் சுக்ரீவனின் பல படைத்தலைவர்களில், அனுமன் தந்தையும் ஒருவர். அவர் பெயர் என்ன?

36. சீதையைத் தேட தென்திசைக்கு, சுக்ரீவனால் அனுப்பப்பட்ட வானரப் படையின் தலைவன் பெயர் என்ன?

37. தென்திசை ஏகிய வானரப்படைக்குச் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்கக் கொடுக்கப்பட்ட தவணைக்காலம் எவ்வளவு?

38. "நல் இயலாளுக்கு எல்லாம் நலன் அன்றிப் பிரிது உண்டாமோ?" "மங்கையர் இவளை ஒப்பார் மற்றும் உளார் இல்லர்" - இவை யாரைப் பற்றிக் கூறப்பட்ட பாடல் வரிகள்?

39. பிலம்புக்கு நீங்கு படலத்தின் கதாநாயகியாகக் கம்பரால் காட்டப்பெறுபவர் யார்?

40. "பார் அதனின் வாழ் உயிர்கள் அம் மதியினோர் கண்டிலாதென, அயன் கண்டிலாதென கொலாம்" - இக்கவிதை அடிகளில் கம்பர் உணர்த்துவது யாது?

41. சீதையைத் தேட தென்திசை சென்ற வானரர்கள் ஏமகூட மலையைக் கண்ட போது என்ன நினைத்தார்கள்?

42. சுயம்பிரபையைக் கண்ட வானரர்கள் என்ன எண்ணினார்கள்?

43. பில நகரத்திலிருந்து வானரர்கள் வெளிவந்து ஒரு பொய்கைக் கரையை அடைந்த போது, அங்கதனைத் தாக்கிய அரக்கனின் பெயர் என்ன?

44. "பெண்ணை நண்ணினார் பெண்ணை நாடுவார்" என்னும் பாடல் வரியில் கம்பர் கூறுவதென்ன?

45. தென்திசையில் சீதையைத் தேடிச் சென்ற வானரர் படை, அண்டர் நாட்டை (தேவர் உலகத்தை) ஒத்திருக்கும் ஒரு நாட்டையும் கடந்து சென்றார்களாம் அது எந்த நாடு?

46. சூரியன் தேர்சாரதி அருணனின் இரு மகன்கள் யாவர்?

47. சூரியன்கதிரால் கருகப்பெற்ற சம்பாதியின் சிறகுகள், பிறகு எப்படி முளைத்து வளர்ந்தது?

48. இராவணன் சீதையைச் சிறைஎடுத்துச் சென்றபோது அதைக் கண்ட சம்பாதி, இராம - இலக்குவருக்குச் சீதையை மீட்பதற்குச் சொன்ன யோசனை என்ன?

49. சீதையைத்தேடி இலங்கை செல்லத்தகுதியானவர் அனுமனே என்று கூறியவர் யார்?

50. "கொம்பினை கண்டிலர்; குப்புற்று ஏகினார்" - இது யாரைப்பற்றிய கூற்று.

இந்த விநாடிவினாக்கள், அம்பத்தூர் கம்பன்கழக மாதக் கூட்ட எண்கள் 109, 125, 126 & 127இல் முறையே, 17.02.2018, 27.7.2019, 17.8.2019 மற்றும் 21.09.2019 தேதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கேட்கப்பெற்றவை.



கிட்கிந்தா காண்ட விநாடிவினாக்களின் விடைகள்

1. சுக்ரீவன்
2. சுக்ரீவன் வாயிலாக
3. ருசியமுக மலையில்
4. வாலியுடன் போர்செய்பவரின் பலத்தில், பாதி வாலிக்கு வந்துவிடும் என்பது
5. இராமர் (சுக்ரீவனைப் பார்த்து)
6. தயரதன்
7. அனுமன்
8. ஏழு மராமரங்களை ஊடுருவிச் செல்லும்வண்ணம், இராமர் அம்பு எய்திய திறத்தைக் கண்டு
9. துந்துபி
10. கிட்கிந்தையின் வானரர் சேனையையும் கரடிச் சேனையையும் இராமர் இலக்குமனர் கண்டு வியந்தது பற்றி
11. அங்கதனும் ஜாம்பவானும்
12. சம்பாதி
13. பம்பை நதியைப் பற்றி
14. இலக்குவனின் கூற்று
15. மாயமானாக மாறிய மாரீசனுக்கு, இராமர் மா (பெரிய) எமனாக ஆகிவிட்டார் என்பது
16. இந்திரன் சிறுவன் வாலி, கதிரவன் சிறுவன் சுக்ரீவன்

17. சிவன், நான்முகன் உள்ளிட்ட தேவர்களையெல்லாம், மானிடப் பிறவி எடுத்துவந்த திருமால் வென்று விட்டார் என்பது
18. இராமர் சுக்ரீவனைப் பார்த்து கூறியது.
19. போரில் தன்னை எதிர்ப்பவர்களின் வலிமையில் பாதிஅளவை (வாலி) எய்துவான் என்பது.
20. வாலிக்கு முன்
21. ஏழு மராமரங்களில் ஒன்றைத் துளைக்குமாறு சுக்ரீவன் வேண்ட, இராமர் ஏழு மராமரங்களையும் ஒரு சேரத்துளைத்து முடித்தார்.
22. துந்துபியின் உடலை
23. "வாலியை முதலில் கொன்று சுக்ரீவனை மன்னனாக்கி, எழுபது வெள்ள பெரும்குரங்குச்சேனையைச் சேர்த்துக் கொண்டாலன்றி, மாயாவி இராவணன் இருப்பிடத்தை ஒரே நேரத்தில் எல்லாஉலகங்களிலும் தேடிஉணர்வதற்கு அரிதாகும்" என்பது.
24. அனுமன், தாரன், நீலன், நளன் என்னும் நால்வர்
25. இராமருடையது
26. வாலி இராமரைப் பார்த்துக் கூறுவதாக
27. வாலி, சுக்ரீவனைக் குறித்து
28. இராமனின் அம்பு வாலியின் வலிய மார்பை, வாழைப்பழத்தைத் தைத்துச் செல்லும் ஊசிபோல எளிதாகத் தைத்துச் சென்றது எனக் கம்பர் விளக்குகிறார்.
29. வாலி
30. கஜேந்திர மோட்சம் பெற்ற யானை
31. "எக்குலத்து யாவர்க்கும் வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்" என்பது

32. தன்மீது செலுத்திய அம்பைச் சுக்ரீவன்மேல் செலுத்தாதிருக்கவேண்டும் என்பதும், தமையனைக்கொன்றான் என இராமனின் தம்பியர் சுக்ரீவனை இகழாதிருக்கவேண்டும் என்ற இரண்டுமாகும்.

33. வாலி இறக்கும்தருவாயில் அவன்மகன் அங்கதனை அடைக்கலமாக ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, அங்கதனுக்குத் தன் உடைவாளை இராமர் அளித்தார் என்பது

34. "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க, இகழ் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்"

35. கேசரி

36. நீலன்

37. ஒரு மாத காலம்

38. சீதையைப் பற்றி

39. சுயம்பிரபை என்னும் தேவகன்னிகை

40. விந்தியமலையில் வானரவீரர்கள் சீதையைத் தேடியபோது அவர்கள் கண்டிலாதவை, நான்முகனால் படைக்கப்படாதவையே ஆகும் என்பது.

41. இராவணன் அரசிருக்கும் திரிகோணமலையே என நினைத்தார்கள்.

42. சீதையோ என ஐயுற்றார்கள்

43. துமிரன்

44. சீதையாகிய பெண்ணைத்தேடும் வானரவீரர்கள் பெண்ணையாற்றை அடைந்தார்கள் என்பது

45. பாண்டிய நாடு

46. சம்பாதியும் சடாயுவும்

47. இராமனின் நாமத்தை வானரவீரர்கள் அனைவரும் கூறியதால்

48. வானரவீரர்களில் ஒருவர் இலங்கை சென்று சீதையைத் தேடிப்பார்த்து, இராமர் சொல்லியதை அவளிடம் சொல்லிவருதல், அன்றேல் சீதை இலங்கையில் இருப்பதை இராமரிடம் கூறுதல் என்பதாகும்.

49. சாம்பன்

50. ஏம கூடமலையில் சீதையைத் தேடியலைந்து, அவளைக் காணாது திரும்பிய வானரவீரர்களைப் பற்றிய கூற்று.



6. சுந்தர காண்ட விநாடிவினாக்கள்

1. ஒரு 'இல்' என்னும் இராமரின் அருங்குணத்தை, கம்பர் யார் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.
2. "எல்லை நீத்த உலகங்கள் யாவும் என் சொல்லினால் சுடுவேன்" என சூளுரைத்தவர் யார்?
3. "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" இத்தொடர் கம்பராமாயணத்தில் யார் கூற்றாக இடம் பெறுகிறது?
4. "கற்பு எனும் பெயரது ஒன்று களிநடம் புரியக்கண்டேன்" எனக் குறிப்பிட்டவர் யார்?
5. "கண்டனன் கற்பினுக்கு அணியினைக் கண்களால்" என்னும் தொடரில் கம்பர் எதை விளக்குகிறார்?
6. "இந்தப் பிறவிக்கு இருமாதைரைச் சிந்தையாலும் தொடேன்" - இதில் உணர்த்தப்படும் கருத்து என்ன?
7. மகேந்திரமலைச் சிகரத்தின் மீதிருந்து அனுமன் கடல் தாவிச் செல்லும் வழியில், கடல்மேல் எழும்பிக் குறுக்கிட்ட மலையின் பெயர் என்ன?
8. இலங்கையின் உள்ளே, மதில்மேல் தாவிச்செல்ல முயன்ற அனுமனை அச்சுறுத்தியவள் யார்?
9. அசோகவனத்தில் சீதைக்குக் காவலாகஇருந்த அரக்கமகளிரில் சீதையிடம் அன்புடையவளாக இருந்தவள் யார்?
10. சுந்தர காண்டத்திலுள்ள நிந்தனைப் படலத்திற்கு அப்பெயர் அமையக் காரணம் என்ன?
11. விரூபாட்சன், யூபாசன், பிரகசன், பாசகர்ணன், துர்த்தரன் என்பவர்கள் யார்?
12. தேன் கூடுகள் மிகுந்திருக்கும் மதுவனம் யாருடையது எனக் கம்பர் கூறுகிறார்?
13. சிறப்புமிக்க இலங்கை நகரை உருவாக்கியது யார் எனக் கம்பர் கூறகிறார்?
14. இலங்கையில் நுழைந்து, அரச குடும்பத்தினரின் பல மாளிகைகளைப் பார்த்துச்சென்ற ஆஞ்சநேயன், சீதா தேவியாரோ என்று யாரைப் பார்த்து ஐயுற்றான்?

15. “தருமமே காத்ததோ? சனகன் நல்வினைக் கருமமே காத்ததோ? கற்பின் காவலோ“ என யாரைப் பார்த்து அனுமன் வியந்தார்?
16. “பேர்க்கப்பட்டனர் சிலர்; சிலர் பிடியுண்டுபட்டார்; ஆர்க்கப்பட்டனர் சிலர்; அடியுண்டு பட்டார்” - இப் பாடல் வரிகள் கம்ப காவியத்தில் யாரைக் குறித்துப் பாடப்பெற்றன?
17. இலங்கை அசோகவனத்தில் சீதையைக்கண்டு திரும்பிய ஆஞ்சநேயரால் இராவணன் அடைந்த பேரிழப்பு என எதைச் சொல்லலாம்?
18. “அடியேன் தோள் ஏறுகடிது என்று தொழுது இன் அடிபணிந்த அனுமனின் வேண்டுகோளை, சீதை ஏற்க மறுத்ததின் முக்கிய காரணம் என்ன?
19. இந்திரசித்தன் பிரமபாசத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முடியுமென்றாலும், அனுமன் அதற்குக் கட்டுப்பட்டு இருந்ததற்கான முக்கிய காரணம் என்ன?
20. கடல் தாவு படலத்தில் கம்பர் குறிப்பிடும் அரசை, அங்காரதரை என்பவர்கள் யாவர்?

இந்த விநாடிவினாக்கள், அம்பத்தூர் கம்பன்கழக மாதக் கூட்ட எண்கள் 110 (31.03.2018ஆம் தேதி நடைபெற்ற) நிகழ்ச்சியில் கேட்கப்பெற்றவை.



சுந்தர காண்ட விநாடிவினாக்களின் விடைகள்

1. சீதையின் வாயிலாக
2. சீதை
3. இலங்கைமா தேவியின் கூற்றாக
4. அனுமன்
5. அசோக வனத்தில் அனுமன் நேரடியாகத் தன்கண்களாலேயே சீதையைக் கண்டதையும், அவள் கற்புநெறி காத்திருக்கிறாள் என்பதையும் கம்பர் விளக்குகிறார்.
6. இராமர் அந்த அவதாரப் பிறவியில் ஏகபத்தினிவிரதன் என்னும் கருத்து உணர்த்தப்படுகிறது.
7. மைநாக மலை
8. இலங்கை மாதேவி என்னும் அரக்கி லங்கிணி
9. திரிசடை
10. அசோகவனத்தில் சீதையை முதன் முறையாகக் கனாச் சென்ற இராவணனை, சீதை நிந்தனை செய்து அறிவுறுத்தும் விபரத்தை இப்படலம் கூறுவதால்.
11. இராவணனுடைய பஞ்ச சேனாதிபதிகள்
12. வாலியின் வசமாயிருந்து பின்பு சுக்ரீவனுக்கு உரியதாக ஆகிய வனம்
13. தேவசிற்பி விசுவகர்மா
14. மண்டோதரியைப் பார்த்து
15. சீதையைப் பார்த்து
16. இலங்கையில் ஆஞ்சநேயரை எதிர்கொண்டு போர்புரிந்த அரக்க கிங்கரர்களின் நிலைமையைப் பற்றி
17. இராவணனின் இளையமைந்தன் அக்ககுமாரன் ஆஞ்சநேயரால் கொல்லப்பட்டதை
18. அது இராமனின் வில் வலிமைக்கு இழிவான செயல் என்பதால்
19. இராவணனை நேரில் பார்த்து இராமரின் பெருமையையும் வலிமையையும் கூறி, அவன் கருத்தை அறிந்து கொள்வது என்பதே.
20. ஆஞ்சநேயரின் வலிமையை அறிந்து வர தேவர்களால் ஏவி அனுப்பப்பெற்ற இரு அரக்கியர்


7. யுத்த காண்ட விநாடிவினாக்கள்

1. "ஒன்றேயென்னின் ஒன்றேயாம்; பலவென்று உரைக்கின் பலவேயாம்" எனத் தொடங்கும் பாடல், யுத்த காண்டத்தில் எப்பகுதியில் இடம்பெறுகிறது?
2. அனுவைப் பற்றிய குறிப்பு கம்பராமாயணத்தில் எப்படலத்தில் வருகிறது?
3. "மற்றினி உரைப்பதென்னை, மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி" எனச் சொன்னவர் யார்?
4. இராமர், லெட்சுமணர் வானர சேனையுடன் இலங்கைக்குச் செல்ல, கடலின் மேல் அணை கட்டி முடித்தவர் யார்?
5. இராவணனின் புறமுதுகு வடுக்கள் எப்படி ஏற்பட்டன என்று விபீடணன் இராமருக்குக் கூறினான்?
6. மருத்தன் என்பவன் யார்?
7. "கறங்குபோல் வில்பிடித்த காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய்" - பாடலின் இந்த அடி யாரைக் குறித்துக் கூறப்பட்டது?
8. யுத்தத்திற்கு தேவேந்திரனால் இராமருக்கு அனுப்பப்பட்ட தேரின் சாரதி யார்?
9. மகரக்கண்ணன் என்பவன் யார்?
10. கம்ப காவியத்தில் இராவணன் எத்தனை முறை கீழே விழுந்து சீதையை வணங்கியதாகக் கூறப்படுகிறது.
11. வால்மீகத்தில் இல்லாத மாயாசனகப் படலத்தைக் கம்பர், தன் காவியத்தில் சேர்க்கக் காரணம் எது எனக் கொள்ளலாம்?
12. "கும்பிட்டு வாழ்கிலேன், கூற்றையும் ஆடல் கொண்டேன்" எனக் கூறியவர் யார்?
13. சீதை களம்காண் படலத்தில், தெய்வ விமானத்தில் போர்க்களத்திற்க் கூட்டிச் சென்று, இராமர் இலக்குவர் மயங்கிக் கிடந்ததை இறந்துபட்டதாகக் காட்டப்பட்ட சீதைக்கு உண்மை நிலையை உணர்த்தியவர் யார்?
14. ஆஞ்சநேயன் கொணர்ந்த சஞ்சீவிமலையால்,

யுத்தத்தில் மாண்ட அரக்கர்கள் மட்டும்ஏன் பிழைத்து எழ முடியவில்லை?

15. சீதையை அமுதால்செய்த நஞ்சு என்று கூறியவர் யார்?
16. இராவணன் மார்பில்குத்திய இரு வானரவீரர்கள் யார்?
17. "எள்இருக்கும் இடன்இன்றி உயிர்இருக்கும் இடம் நாடி இழைத்தவாறோ, உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியது" எது?
18. "இவனேதான் அவ்வேத முதல் காரணன்" என வியந்தவர் யார்?
19. ஒரு பெண்ணின் அவல நிலையை, அவள் எழுந்தாள் என்பதிலிருந்து அரற்றத் தொடங்கினாள் என்பது வரை 12 வகையாகக் கூறுகிறார் கம்பர். அப்பெண் யார்?
20. "வாரணம்பொருதமார்பும் வரையினைஎடுத்த தோளும்" யாருடையது எனக் கம்பர்கூறுகிறார்?
21. இராவணவதத்தைஅடுத்து பூதலம்வந்த தயரதனிடம் இராமர் கேட்டவரம் என்ன?
22. தயரதன் உடலை இறுதிக்கடன் ஆற்றுவதற்குமுன் தைலத்தில்இட்டு வைத்திருந்ததுபோல், மற்றொரு கம்பகாவியப்பாத்திரத்தின் உடலையும் தைலத்தில் வைக்க ஏற்பாடுசெய்யப்பட்டது. அது யாரின் உடல்?
23. சீதைதீக்குளிக்க அக்னியை மூட்டச் சொன்னவர் யார்?
24. 'அரியணை அனுமன்தாங்க' எனத் தொடங்கும் பட்டாபிசேகப் பாடலில், "இருவரும் கவரிதாங்க" எனக் கூறப்படுகிறது? அந்த இருவர்யார்?
25. பட்டாபிசேகத்தின்போது, இராமர் அனுமனுக்கு அளித்த உயரியபரிசு என்ன?

இந்த விநாடிவினாக்கள், அம்பத்தூர் கம்பன்கழக மாதக் கூட்ட எண்கள் 94/19.11.2016ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் கேட்கப்பெற்றவை.



யுத்த காண்ட விநாடிவினாக்களின் விடைகள்

1. யுத்த காண்ட கடவுள்வாழ்த்துப் பாடலாக
2. இரணியன்வதைப் படலத்தில்
3. இராமர்
4. மயன் மகன் நளன்
5. திக்விஜயத்தின்போது, இராவணன் எண்திசை யானைகளோடு போர்செய்ய, அவை முட்டியதால் இந்த வடுக்கள் ஏற்பட்டனஎன்று.
6. மாயத்தில் வல்ல அரக்கன்
7. கும்பகர்ணனைக் குறித்து
8. மாதலி
9. கரனின் மகன்
10. மூன்றுமுறை (சீதையைச் சிறையிட்ட போதும், அசோக வனத்தில் தன்ஆசையைச் சீதையிடம் வெளியிட்டபோதும் மற்றும் மாயாசனகப் படலத்தில் சீதையைச் சந்தித்தபோதும்)
11. தமிழருக்கு, அடிப்படையிலேயஅமைந்துள்ள பெற்றோர் பாசத்தால்
12. கும்பகர்ணன்
13. திரிசடை
14. இராவணன் ஆணைப்படி, அரக்கர்களின் இறந்த உடல்களையெல்லாம், மாயாவிஅரக்கன் மருத்தன் கடலில் எறிந்துவிட்டதால்.
15. மண்டோதரி
16. சுக்ரீவன் மற்றும் அனுமன்
17. இராமன் இராவணன் மேல் எய்த இறுதிஅம்பு
18. இராவணன்
19. சீதை
20. இராவணனுடையது
21. கைகேகியும் பரதனும் தனக்குத் தாயும் தம்பியுமாக இருக்க வேண்டும் என்னும்வரம்.
22. இந்திரசித்தின் உடல்
23. சீதையேதான்
24. இலக்குவனும் சத்ருக்கனனும்
25. தன்னைத் தழுவிக்கொள்ளச் சொன்னது.

இணைப்பு - 1

கம்பன் கழகம், அம்பத்தூர்

2016-ஆம் ஆண்டு நடைபெற்ற மாதக்கூட்ட விநாடிவினா நிகழ்ச்சிகளில், அதிக வினாக்களுக்குச் சரியாக விடையளித்துச் சிறப்புப் பரிசு பெற்ற பார்வையாளர்கள் :

முதற்பரிசு : திருமதி. அலமேலு கிருஷ்ணன்
இரண்டாம் பரிசு : திரு. சம்பத் சிரிப்பானந்தா
மூன்றாம் பரிசு : திரு. இரவி

2017-ஆம் ஆண்டுக்கான பல்வேறு விநாடிவினா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அதிக வினாக்களுக்குச் சரியாக விடையளித்துச் சிறப்புப் பரிசு பெற்றவர்கள் :

முதற்பரிசு : திரு. ஸ்ரீகாந்தன்
இரண்டாம் பரிசு : திரு. லால் சுரேஷ்பாபு
மூன்றாம் பரிசு பெற்ற ஐவர் : திரு. ராசகோபால்
திரு. சங்கர்
திரு. எஸ். சீதாராமன்
திரு. சீனிவாசன்
திரு. இராமமூர்த்தி



இணைப்பு - 2

கம்பன் கழகம், அம்பத்தூர்

நூலாசிரியர், நெறியாளராக இருந்து நடத்திய,
பார்வையாளர்கள் பங்கேற்கும்
ஒரு விநாடிவினா நிகழ்ச்சி



இது, 27.08.2016 அன்று நடைபெற்ற
91ஆம் மாதக்கூட்டத்தில் நிகழ்ந்தது.
இடமிருந்து வலம் :
நூலாசிரியர்
தலைவர் பள்ளத்தூர் பழ. பழனியப்பன்
தமிழ்ச்சுடர் விருது பெற்ற சிறப்புப் பேச்சாளர்
திரு. முத்து இராமமூர்த்தி
துணைப் பேச்சாளர்
புலவர் சா. கலியாணசுந்தரம் ஆகியோர்.

இணைப்பு - 3

கம்பன் கழகம், அம்பத்தூர்

91ஆம் மாதக் கூட்ட விநாடிவினா நிகழ்ச்சிக்கு
வருகை தந்திருந்த பார்வையாளர்களில்
ஒரு பகுதியினர்



நாள் : 27.08.2016



விநாடிவினாக்கள் பரவலான அறிதலையும் நுணுக்கமான புலமையையும் அளிக்கின்றன. இப்பயன்பாட்டைக் கம்ப காவியத்தில் நல்கும் வண்ணம், அம்பத்தூர் கம்பன் கழகம் ஒவ்வொரு மாதக் கூட்டத்திலும் பார்வையாளர்களுக்கான, பரிசுடன் கூடிய விநாடிவினா நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. நூலாசிரியர், நெறியாளராக இருந்து நடத்திய அவ்வகை விநாடிவினாக்கள் இதில் விடையுடன் தொகுத்து வழங்கப்பெற்றிருக்கிறது.

இந்நூலில் இடம்பெறுகிற விநாடிவினாக்களில் சில...

1. கருத்தாழம் காண்பீர்!

- "மாயாமான் ஆயினான், மா யமான் ஆயினான்" - இந்த அடியில் பொதிந்திருக்கும் கம்பரின் கவிச்சிறப்பைக் கூறுக. (கிட்கிந்தாகாண்ட வினா எண் 15)
- "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் புறநானூற்றுப் பாடல் வரியின் கருத்தைப் பிரதிபலிப்பதாக உள்ள கம்பரின் கூற்றைக் கூறுவீரா? (கிட்கிந்தாகாண்ட வினா எண் 31)
- இராவணன் எத்தனை முறை கீழே விழுந்து சீதையை வணங்கியதாகக் கம்ப காவியம் கூறுகிறது? (யுத்தகாண்டப் பகுதி வினா எண் 10)

2. என்ன / எது என உரைப்பீர்!

- இராமர் - சீதை திருமணச் சடங்குகளில் இன்றைக்கு வழக்கில் இருந்து வரும் ஒரு முக்கிய திருமணச் சடங்கு குறிப்பிடப்படாமல் இருக்கிறது. அது எது? (பாலகாண்டப் பகுதி வினா எண் 16)
- மராமரத்தை அம்பினால் துளைக்க சுக்ரீவன் இராமரை வேண்டியதற்கும், பின்னர் இராமர் அவ்வாறே மராமரத்தைத் துளைத்ததற்கும் உள்ள வேறுபாடு என்ன? (கிட்கிந்தாகாண்டப் பகுதி வினா எண் 21)
- "அரியணை அனுமன் தாங்க..." என்னும் பட்டாபிசேகப் பாடலில் "அங்கதன் உடைவாளேந்த" எனக் கம்பர் குறிப்பிடுகிறார். இதன் முன் நோக்காக வாலி வதைப் படலத்தில் அவர் கூறுவது என்ன? (கிட்கிந்தாகாண்டப் பகுதி வினா எண் 33)

3. யாரிவர் கூறுவீர்?

- இலக்குவன் வாளினால் மூக்கறுபட்ட இரண்டாவது அரக்கி யார்? (ஆரணியகாண்டப் பகுதி வினா எண் 19)